**அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணங்கள் கூட்டுத்தாபனம் - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணங்கள் கூட்டுத்தாபனத்தின் (“கூட்டுத்தாபனம்”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை வெளியிடவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களின் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்கான அடிப்படையொன்றை வெளியிட போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது பொறுப்பாகவுள்ளது. எவ்வாறாயினும், மறுப்பு அவிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்க போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை என்னால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வாளரின் அவதானிப்பு**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கைமைகள்**

| | **உரிய தொடர்புடைய நியமங்களுடனான இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 1 இன் 32 பந்தி பிரகாரம் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டால் அன்றி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அல்லது வருமானம் மற்றும் செலவுகளை பதிலீடு செய்யக்கூடாத போதும் நிர்மாண கடன்படுனர் மற்றும் வேலை ஆரம்ப முற்பணம் முறையே ரூபா 31.86 மில்லியன் மற்றும் ரூபா 0.52 மில்லியனான சொத்துக்கள் பொறுப்புக்கள் மீதிகள் ஒன்றுக் கொன்று பதலீடு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க எதிர்வரும் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் சரியாக செம்மையாக்கி கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | நிதி அறிக்கையிடலிற்கான கருத்து ரீதியான சட்டகத்தின் பந்தி இலக்கம் 4.8 முதல் 4.14 இற்கு மாற்றமாக பௌதீக ரீதியாக காணப்படும் இருப்பு மீதி மற்றும் கணக்கீட்டு முறைமையினுள் காட்டியுள்ள இருப்பு பெறுமதிக்கிடையே வித்தியாசமான ரூபா 58.25 மில்லியனான மீதயொன்று இருப்பு சீராக்க கணக்கொன்றில் உட்படுத்தி அப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் இறுதி | ரூபா 58.25 மில்லியனான இருப்பு செம்மையாக்கல் மீதிக்கான விடயங்களை கண்டறிந்து கணக்குகளிற்கு தேவையான செம்மையாக்கலை மேற்கொள்ளப்படும். ஏற்கனவே கனிசமான பெறுமானத்தால் சீராக்கம் செய்யப்பட்டு | இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை எதிர்காலத்தில் இனங்கண்ட மாற்றங்களை சீராக்கி சரியாக தயாரிக்க வேண்டும். |

| | |
|---|---|
| இருப்பினுள் உட்படுத்தியுள்ள காரணத்தால் கூட்டுத்தாபனத்தின் நடைமுறை சொத்துக்கள் அப்பெறுமானத்தால் மிகை கணக்கீடாகியிருந்தது. | மேற்குறித்த மீதியை குறைத்துள்ளதுடன் எஞ்சிய மீதியையும் சரிசெய்யப்படும். |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் கடன்கொடுனரான 2024 திசெம்பர் 31 திகதிக்கு தனியார் கம்பனி ஒன்றிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதியொன்றைாக ரூபா 27.81 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்ததுடன், கூட்டுத்தாபனம் குறித்த கம்பனியிடத்தில் சேவையை பெற்று வெட் வரியுடன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அந்த கம்பனி வெட் வரி பதிவு செய்த நுறுவனம் ஒன்றாகாததால் வெட் வரியை பதிலீடு செய்து கொள்ள முடியாதிருந்தது. 2020 ஆண்டு முதல் குறித்த தொகையை பெறவேண்டிய மீதியாக காண்பித்ததுள்ளது. | 2025 ஆண்டில் தேவையான ஒதுக்கத்தை நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும். | வெட் வரிக்காக பதிவு செய்யாத நிறுவனம் ஒன்றிற்காக வெட் உடன் கொடுப்பனவு செய்வனூடாக அறவிட முடியாது போன நட்டத்தை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறிவிட வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க வேண்டும். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு அல்லது அறிக்கை**

| | விடயம் | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பெறுமதி ரூபா மில்லியன் | நேரொத்த அறிக்கை பிரகாரம் பெறுமதி ரூபா மில்லியன் | வித்தியாசம் ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | வியாபார கடன்கொடுனர் மற்றும் நானாவித கடன்கொடுனர் | 1,156.07 | 1,155.30 | 0.77 | எதிர்காலத்தில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அட்டவணையை ஒப்பிட்டு சரியாக தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி | 1,700.28 | 1,695.06 | 05.22 | எதிர்காலத்தில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (இ) | வேலை ஆரம்ப முற்பணம் | 488.38 | 389.36 | 99.02 | எதிர்காலத்தில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | கொங்கிரீட் நிலைய கடன்படுனர் | 63.84 | 42.57 | 21.27 | எதிர்காலத்தில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (உ) | கொள்வனவு முற்பணம் | 30.63 | 30.86 | (0.22) | எதிர்காலத்தில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.5.4 அமைப்பின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டிற்காக தேறிய நட்டம் ரூபா 1,411.00 மில்லியனானதுடன் 2024 திசெம்பர் 31 திகதி திரண்ட நட்டம் ரூபா 6,812.52 மில்லியனானது. அவ்வாறே சொத்துக்களை விஞ்சிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 4,562.51 மில்லியனானதுடன் நடைமுறை சொத்துக்களை விஞ்சிய நடைமுறை பொறுப்புக்களின் அளவு ரூபா 4,161.91 மில்லியனானது. மேலும் 2024 திசெம்பர் 10 திகதி இலக்கம் அமப/24/1684/608/032-1 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த கூட்டுத்தாபனத்தின் 03 பிரிவுகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கூட்டிணைக்க தீர்மானித்திருந்த போதும் இதுவரை கூட்டுத்தாபனத்தால் கூட்டிணைப்பது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் தொடர்ந்தியங்கும் நிச்சமற்ற தன்மை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட போதும் இலங்கை கணக்கீட்டு நியமம் - 01 இன் 25 பந்திக்கு முரணாக தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக பொருண்மையான | 2024 செப்டம்பர் 10 திகதிய இலக்கம் அமப/24/1684/608/032-I கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கூட்டிணைக்க தீர்மானித்திருந்த போதும் கூட்டுத்தாபனத்தை முடுவதால் ஏற்பாடும் பிரதிகூலங்களை கவனத்திற் கொண்ட பின்னர் 2025 செப்டம்பர் 10 திகதி பிரதமர் அவர்களுடன் நடந்த கலந்துரையாடலின் போது கூட்டுத்தாபனத்தை கலைக்க அல்லது நடாத்தித் செல்லுதல் எனும் இரண்டு சந்தர்ப்பங்களிற்கும் கிரயம் - நலன்களை பகுப்பாய்வு செய்து தீர்மானம் எடுக்க வேண்டுமொன முடிவெடுக்கப்பட்டது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக சரியாக மதிப்பீடு செய்து தேவையானவாறு நிதிக்கூற்றுக்களில் பெளிப்படுத்த வேண்டும். |

நிச்சயமற்ற தன்மையொன்று இல்லையென குறிப்பு இலக்கம் 2.1.2 மூலம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**1.5.5 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாதமை**

| | விடயம் | தொகை ரூபா மில்லியன் | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | கலைக்கப்படவுள்ள துணைக் கம்பனியான டெவ்கொசோவா (தனியார்) கம்பனியின் முதலீடுகள் | 9.21 | மீதி உறுதிப்பாடு மற்றும் கணக்காய்வு சான்றுகள் | கணக்குகளில் குறிப்பிடப்படும் முதலீகளை போன்று கடன்படுனரிற்காகவும் போதிய விபரங்கள் இல்லாததால, பாதுகாப்பு முறைமை பிரகாரம் ஐயக் கடனிற்காக ஒதுக்கீடு நூறு சதவீதம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முதலீடுகளின் நிலையான தன்மை மற்றும் திருப்திகரமாக மீள்மதிப்பீடு செய்யவதற்குரிய தகவலகள் ஒப்பாய்வு மற்றும் உறுதிப்பாடுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | டெவ்கொசோவா (தனியார்) கம்பனியிலிருந்து கிடைக்க வேண்டிய கடன்படுனர் மீதி | 25.31 | மீதி உறுதிப்பாடு மற்றும் கணக்காய்வு சான்றுகள் | கணக்குகளில் குறிப்பிடப்படும் முதலீகளை போன்று கடன்படுனரிற்காகவும் போதிய விபரங்கள் இல்லாததால, பாதுகாப்பு முறைமை பிரகாரம் ஐயக் கடனிற்காக ஒதுக்கீடு நூறு சதவீதம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கடன்படுனர் மீதிகளின் சரியான தன்மையை மற்றும் பூரண தன்மையை பரீட்சிக்க விரிவான ஆவணங்கள் மற்றும் மீதி உறுதிப்பாடுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (இ) | நிர்மாண கடன்படுனர் | 93.79 | மீதி உறுதிப்பாடு | கடன்படுனர் மீதி உறுதிப்பாட்டு கடிதத்தை பெற்றுக் கொள்ள கோரியுள்ள போதும், இதுவரை உறுதிப்படுத்தல் கிடைக்கவில்லை. | கடன்படுனர் மீதிகளின் நிலையான தன்மையை உறுதி செய்வதற்காக மீதி உறுதிப்பாடுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | நிர்மாண நிறுத்தி வைத்தல் | 574.13 | மீதி உறுதிப்பாடு | கடன்படுனர் மீதி உறுதிப்பாட்டு கடிதத்தை பெற்றுக் கொள்ள கோரியுள்ள போதும், இதுவரை உறுதிப்படுத்தல் கிடைக்கவில்லை. | நிறுத்தி வைத்தல் மீதிகளை உறுதி செய்வதற்காக மீதி உறுதிப்பாடுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (உ) | கடன்படுனர் (வீதி சமிக்ஞை) | 95.77 | மீதி உறுதிப்பாடு | கடன்படுனர் மீதி உறுதிப்பாட்டு கடிதத்தை பெற்றுக் கொள்ள கோரியுள்ள போதும், இதுவரை உறுதிப்படுத்தல் கிடைக்கவில்லை. | நிறுத்தி வைத்தல் மீதிகளை உறுதி செய்வதற்காக மீதி உறுதிப்பாடுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஊ) | கடன்படுனர் (கொன்கிரீட் தளம்), | 63.84 | மீதி உறுதிப்பாடு | கடன்படுனர் மீதி உறுதிப்பாட்டு கடிதத்தை பெற்றுக் கொள்ள கோரியுள்ள போதும், இதுவரை உறுதிப்படுத்தல் கிடைக்கவில்லை. | -மேற்படி- |
| (ஏ) | பூஜிமா ஸ்டேட் கோபரேஷன் (துணை கம்பனி) இற்கு மேற்கொண்ட கொள்வனவு முற்பணம் | 2.17 | மீதி உறுதிப்பாடு | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மீதி உறுதிப்படுத்தல் செய்திருக்கவில்லை. | கொள்வனவு முற்பண மீதியை உறுதி செய்து கொள்ள மீதி உறுதிப்பாடுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஐ) | எரிபொருள் வைப்பு | 15.31 | மீதி உறுதிப்பாடு | எரிபொருள் வைப்பு ரூபா மில்லியன் 15.31 இற்கான அட்டவணை இத்துடன் இணைக்கப்பட்டுள் ளது. | எரிபொருள் வைப்பு மீதியை உறுதி செய்து கொள்ள மீதி உறுதிப்பாடுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 திகதி நிறுத்தி வைத்தல் மீதி ரூபா 574.13 மில்லியனானதுடன் அவற்றில் | 2024 திசெம்பர் 31 திகதி நிறுத்தி வைத்தல் மீதி ரூபா 574.13 மில்லியனானதுடன் | பெறவேண்டிய நிறுத்தி வைத்தல் மீதிகளை அறவிட |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 275.95 மில்லியன் 5 ஆண்டுகளை விஞ்சிய காலமாக தீர்க்கப்படாது காணப்பட்டது. நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்படும் நிறுத்தி வைத்தல் மீதிகள் ரூபா 232.73 மில்லிய ஆண்டு 02 முதல் 05 வரையான காலமாக தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவற்றில் ரூபா 275.95 மில்லியன் 5 ஆண்டுகளை விஞ்சிய காலமாக தீர்க்கப்படாது காணப்படுவதற்கு செயற்திட்டங்களில் காணப்பட்ட தவறுகள் தீர்க்கப்படாதமை (Defects Rectification) மற்றும் சில செயற்திட்டங்கள் இடைநடுவே நின்றுள்ளமை காரணமாகவுள்ளது. | உடன்படிக்கை பிரகாரம் தாமதமின்றி செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 திகதியன்று நிர்மாண கடன்படுனர், கொன்கிரீட் தள கடன்படுனர் மற்றும் மோடார் வாகன சமிக்ஞை தொகுதி கடன்படுனர முறையே ரூபா மில்லியன் 93.79 தொகை, ரூபா மில்லியன் 63.84 தொகை மற்றும் ரூபா மில்லியன் 95.77 தொகையில் முறையே ரூபா மில்லியன் 10.49 தொகை, ரூபா மில்லியன் 37.71 தொகை மற்றும் ரூபா மில்லியன் 6.86 தொகை 5 ஆண்டுகளை விஞ்சிய கடன்படுனராவர். | பொதுவாக பார்க்கும் போது அந்த கடன்படுனர் மீதிகளுடன் கூடிய செயற்திட்டங்களிற்குரிய ஊழியர்களினால் (Client) உரிய அங்கீகாரமின்றி செயற்திட்டங்களை ஆரம்பித்தல், அந்த செயற்திட்டங்களிற்கு தேவையான நிதி ஏற்பாட்டை ஒதுக்கிக் கொள்ளாதமை, நிலவி அரசியல் அதிகாரங்கள் மாற்றமடைந்தமை போன்ற விடயங்களால் அந்த கடன்படுனர் மீதிகளை இதுவரை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. | அறவிட வேண்டிய மீதிகளை அறவிட ஆக்கபூர்வ முறைமை ஒன்றை அறிமுகம் செய்து காலரீதியாக கடன்படுனர் மீதிகளை அறவிட தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய மீதிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 திகதி வியாபார கடன்கொடுனர் மற்றும் நானாவித கடன்கொடுனர் மீதி ரூபா 1,130.37 மில்லியனானதுடன் அதில் ரூபா 128.46 மில்லியன் 5 ஆண்டுகளை விஞ்சிய காலமாக மற்றும் ரூபா 737.40 மில்லியன் ஆண்டு 02 முதல் 05 வரையான காலத்தினுள் தீர்த்திருக்கவில்லை. | அனைத்து நிலுவை வரித் தொகை, அனைத்து வங்கிக் கடன் மற்றும் அனைத்து கடன் கொடுனர்களையும் தீர்க்க அமைச்சு மட்டத்தில் திட்டமிடப்படும். | கடன்கொடுனர் மீதிகளை தீர்க்க விரைவில் ஆக்கபூர்வ முயற்சிகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை வங்கி, சம்பத் வங்கி மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனத்திலிருந்து தொழிற்படு மூலதன தேவைப்பாட்டிற்கு பெற்றிருந்த கடனிற்காக மீளாய்வாண்டு இறுதியில் நிலவிள ரூபா 2,665.58 மில்லியனான நிலுவை கடன் | தவிசாளர் மற்றும் பணிப்பாளர் சபை வங்கி கடனை தீர்ப்பதற்காக 25/1182/809/057-I அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை கடன் தவணை மற்றும் வட்டியை தீர்க்க கூட்டுத்தாபனத்தினால் ஆக்கபூர்வ முறைமை ஒன்றை அறிமுகம் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தவணை மற்றும் வட்டிக்காக மீளாய்வாண்டில் எத் தொகையையும் செலுத்த கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | கூட்டுத்தாபனத்தினால் நிர்மாண பாதுகாப்பு நிதியத்தினால் ரூபா 100 மில்லியன் பட்டியல் வட்டம் மேற்கொள்ளலின் கீழ் பெற்றிருந்த கடன் தொகையின் ரூபா 79.2 மில்லியனை மாத்திரம் மீண்டும் நிதியத்திற்கு செலுத்தியிருந்ததுடன் எஞ்சிய ரூபா 20.8 மில்லியன் (வட்டியின்றிய) மீள் செலுத்தி இருக்கவில்லை. | -மேற்படி- | நிலுவை கடனை தீர்க்க கூட்டுத்தாபனத்தினால் ஆக்கபூர்வ முறைமை ஒன்றை அறிமுகம் செய்ய வேண்டும். |
| (ஈ) | சம்பத் வங்கியிடம் ரூபா 70 மில்லியன் வங்கி மேலதிக பற்று வசதியை பெற்றிருந்ததுடன் அந்த வங்கி மேலதிக பற்று வசதியை விஞ்சி ரூபா 4.06 மில்லியன வங்கி மேலதிக பற்று வசதியை பெற்றுள்ளதுடன் வங்கி மேலதிக பற்று வட்டியாக ரூபா 9.47 மில்லியன் தொகையுடன் 2024 திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய மொத்த தொகை ரூபா 83.53 மில்லியனாக இருந்தது | -மேற்படி- | வங்கி மேலதிக பற்று மற்றும் வட்டியை செலுத்த ஆக்கபூர்வ முறைமை ஒன்றை தயாரிக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதிவரை வேலைகள் கைவிடப்பட்ட 5 செயற்திட்டங்களிற்கு உரிய ரூபா 16.5 இலும் அதிக வேலை ஆரம்ப முற்பணம் தீர்க்கப்படாது காணப்பட்டது. | வேலை பூர்த்தி செயற்திட்டங்களின் இறுதிப் பட்டியல் விநியோகிக்கப்பட்ட உடனே தேவையான செம்மையாக்கல்களை மேற்கொண்டு அனைத்து கணக்குகளையும் நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்படும். | வேலைகள் கைவிடப்பட்ட செயற்திட்டங்களின் முற்பணம் மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துக் கொள்ள குறித்த தரப்பினருடன் கலந்துரையாடி பொருத்தமான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2024 திசெம்பர் 31 திகதிக்கு 17 செயற்திட்டங்களிற்கு உரியதாக வாடிக்கையாளர்களிற்கு செலுத்த வேண்டிய ரூபா 329.04 மில்லியன் மீதியை 2025 ஜுலை 24 திகதி வரை தீர்த்திருக்காததுடன் கணக்காய்விற்கு வழங்கிய தகவல்களின் பிரகாரம் 13 செயற்திட்டங்களும் நிறுத்தப்பட்ட, | இந்த செயற்திட்டத்திற்கான இறுதிப் பட்டியல் வழங்கப்படவில்லை. உறுதிப் பட்டியல் விநியோகிக்கப்பட்ட உடனே அனைத்து சீராக்கங்களை மேற்கொண்டு அனைத்து கணக்குகளையும் நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| வேலைகள் நிறைவு செய்யப்பட்ட மற்றும் வேலைகள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | | |

### 1.6.3 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிர்மாணப் பிரிவில் வேலை கைவிடப்பட்ட மற்றும் வேலை பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களிற்கு உரிய ரூபா 4.61 மில்லியனான கொள்வனவு முற்பணம் காணப்பட்டதுடன் அந்த முற்பணத்தை தீர்க்கப்படாத காரணத்தை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இலக்கம் 1178, 1183, 1179 ஆகிய செயற்திட்டங்களிற்குரிய கொள்வனவு கட்டளை மூலம் கொங்கிரீட் கொள்வனவு செய்துள்ள போதும், அவை நகமுபுரவர ஏனைய செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனால் கொள்வனவு கட்டளைகளை தீர்க்கும் போது ஏற்பட்ட பிரச்சினையான நிலைமையின் மீது இந்த மீதி காட்டப்படுகின்றது. இலக்கம் 1185 மற்றும் 1138 செயற்திட்டங்களில் பணம் அறவிடப்படவுள்ளது. | கொள்வனவு முற்பணம் உரிய காலத்தில் தீர்க்கப்பட வேண்டியதுடன் முகாமைத்துவத்தினால் காணப்படும் நிலைமையை மேற்பார்வை செய்து இது தொடர்பாக தேவையான செயற்பாடுகளை தாமதமின்றி எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 இலக்க கணக்காய்வு சட்டத்தின் 18 (6) பிரிவு | 2024 திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை கணக்காய்வு கட்டணம் ரூபா 14.18 மில்லியன் கணக்காய்வாளர் நாயகத்திற்கு செலுத்தி இருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் அனைத்து கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும். | நியதிச் சட்ட கொடுப்பனவுகளை விரைவில் தீர்க்க முகாமைத்துவம் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 17 திகதிய மற்றும் இலக்கம் 08/2019 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை | அரச நிறுவனங்களில் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள (Procuring Entity) போன்றே அந்த அரச நிறுவனம் மேற்கொள்ளும் | 2025 ஆண்டினுள் அரச இலத்திரனியல் பெறுகை முறைமையில் பதிவு செய்தல் மேற்கொள்ளப்பம். | சுற்றறிக்கைக்கு இணங்க இலத்திரனியல் பெறுகை முறைமையில் பதிவு செய்து அதன் பிரகாரம் பெறுகைகள் |

| | | |
|---|---|---|
| | வியாபார சேவை வழங்கல் (Vendor) மேற்கொள்ள அரச இலத்திரனியல் பெறுகை முறைமையில் (e–Procurement System in Sri Lanka) பதிவு செய்து அந்த முறைமையை பயன்படுத்துமாறு அறிவித்துள்ள போதும், கூட்டுத்தாபனம் 2025 ஆகஸ்ட் மாதம் வரை அரச இலத்திரனியல் பெறுகை முறைமையில் பதிவு செய்திருக்கவில்லை. | நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

**1.8 வரி பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 1996 இன் 17 இலக்க சமூக பாதுகாப்பு சட்டத்தின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 திகதி வரையான நிலுவை சமூக பாதுகாப்பு வரித் தொகை ரூபா 40.35 மில்லியன் செலுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் அனைத்து கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளும். | சட்டத்திற்கு இணங்க நியதிச் சட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்ள தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2009 இன் 09 இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 திகதி செலுத்த வேண்டிய ரூபா 6.11 மில்லியன் தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் அந்த வரியை செலுத்தாததனால் அதன் மீது விதிக்கப்பட்ட அபராதம் ரூபா 1.06 மில்லியனுமாக, மொத்த வரிப் பெறுமதியான ரூபா 7.17 மில்லியன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தியிருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் அனைத்து கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளும். | -மேற்படி- |
| (இ) | 2015 இன் 13 இக்க பொருளாதார சேவைக் கட்டண திருத்த சட்டத்தின் பிரகாரம் 2005 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை கூட்டுத்தாபனத்தினால் செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணமான ரூபா 67.50 மில்லியன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு உரிய தினத்தில் பணம் அனுப்பாததால் அதன் மீது விதிக்கப்பட்ட அபராதம் ரூபா 33.78 மில்லியன் உட்பட | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் அனைத்து கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவை வரித் தொகை ரூபா 101.23 மில்லியன் கணக்காய்வு திகதிய 2025 செப்டம்பர் 30 திகதி வரை செலுத்தியிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2002 இன் 14 இலக்க பெறுமதி சேர் வரி சட்டத்தின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 திகதி செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 1,700.28 மில்லியன் மற்றும் ரூபா 1,267.34 மில்லியன் அபராத தொகையாக கூட்டுத் தொகை ரூபா 2,967.62 மில்லியன் கணக்காய்வு திகதிய 2025 செப்டம்பர் 30 திகதி வரை செலுத்தியிருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் அனைத்து கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளும். | -மேற்படி- |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,411 நட்டமானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 2,246.23 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 835.23 மில்லியனான வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு நிர்மாண செயற்திட்ட பிரிவின் வருமானம் ரூபா 211.67 மில்லினால் அதிகரிப்பு விற்பனை கிரயம் மற்றும் நிதி மற்றும் ஏனைய செலவுகள் முறையே ரூபா 217 மில்லியனால் மற்றும் ரூபா 506.82 மில்லியனால் குறைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு**

| விபரம் | 2024 ரூபா மில்லியன் | 2023 ரூபா மில்லியன் | வித்தியாசம் (அதிகரிப்பு /குறைவு) ரூபா மில்லியன் | வித்தியாசத்தின் சதவீம் |
|---|---|---|---|---|
| வருமானம் | 430.29 | 218.62 | 211.67 | 97 |
| விற்பனை கிரயம் | 976.45 | 1193.51 | (217.06) | 18 |
| ஏனைய வருமானம் | 98.37 | 105.81 | (7.44) | 7 |
| நிருவாக செலவு | 153.98 | 209.43 | (55.45) | 26 |
| ஏனைய செலவு | 603.93 | 935.63 | (331.70) | 35 |
| மொத்த வருமானம் | 6.42 | 154.77 | (148.35) | 96 |
| நிதிச் செலவு | 211.73 | 386.85 | (175.12) | 45 |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

கடந்த ஆண்டின் மற்றும் மீளாய்வாண்டின் தேறிய இலாப விகிதம் முறையே (953) மற்றும் (328) ஆக உச்ச நட்டத்தை அறிக்கையிட்டதுடன் 2023 ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் நட்டத்தில் குறைவொன்று காணப்பட்ட போதும் அது செயற்பாட்டு நடவடிக்கைகளின் குறைவின் மீது இடம்பெற்றுள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் நடைமுறை விகிதம் மற்றும் புரள்வு விகிதமும் பாதகமான நிலையில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. புரள்வு விகிதம் பிரகாரம் கூட்டுத்தாபனம் அதிபுரள்வு மட்டத்தில் அதாவது கூட்டுத்தாபன சொத்துக்கள் மற்றும் உரிமைகளிற்கு ஒப்பாக அதிக கடன் அளவு காணப்படுகின்றது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டின் போது ரூபா 11.29 மில்லியன் செலவில் கூட்டுத்தாபனம் ஹய்டோலிக் பம்பியுடன் ஜெக் இயந்திரமொன்றை கொள்வனவு செய்திருந்ததுடன் இந்த இயந்திரத்தை அறிக்கை வெளியிடும் திகதி வரை பயன்படுத்த முடியாது செயலிழந் நிலையில் காணப்பட்டது. ஆகையால் இயந்திரத்தை கொள்வனவு செய்த நோக்கத்தை அடைந்து கொள்ள முடியாதிருந்ததுடன் அதற்காக செலவிட்ட கிரயம் விளைவற்ற செலவொன்றாக இருந்தது. | ஜெக் இயந்திர உற்பத்தி நிறுவனமான CCL Stressing Systems LTD UK நிறுவனத்தினால் அதன் பிரதான வழங்குனரான Showa Shoji Co. நிறுவனத்தின் ஊடாக இந்த செயலிழந்த இயந்திரத்திற்கு பதிலாக புதிய Stressing Jack இயந்திரமொன்றை வழங்குவதாக எழுத்து மூலம் SD&CC நிறுவனத்தின்று அறவிக்கப்பட்டுள்ளது. | செயலிழந்த இயந்திரத்திற்கு பதிலாக விழங்குனர் நிறுவனம் இணங்கியவாறு புதிய இயந்திரம் ஒன்றை பெற்றுக் கொள்ள தேவையான செயற்பாடுகளை மற்றும் நிதி தேவைப்பாட்டை திட்டமிட வேண்டும். |
| (ஆ) | 2022 ஆண்டில் கூட்டுத்தாபனத்தினால் செயற்படுத்திய இரத்தின அகழ்வு செயற்திட்டத்தின் ஊடாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 6.02 மில்லியன் தேறிய நட்டம் ஏற்பட்டிருந்தது. அனுமதிப்பத்திர உரிமையில்லா கூட்டுத்தாபன நதி மற்றும் ஊழியத்தை பயன்படுத்தி மேற்கொண்ட ஆக்கபூர்வமற்ற செயற்திட்டமொன்றானதுடன் இந்த செயற்திட்டம் நிறைவடைந்து 02 ஆண்டுகள் நடந்துள்ள போதும் தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்கநகை அதிகார சபைக்கு செலுத்திய ரூபா 0.675 மில்லியன் வைப்புத் தொகையை மீள் பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இரத்தினக்கற்கல் விற்பனைக்காக அதன் போது செயற்படுத்தி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ள போதும், அதன் பின்னர் செயன்முறையை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. புதிய பணிப்பாளர் சபையின் மூலம் மீண்டும், அந்த அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதுடன், முதலில் இரத்தினக்கல் விற்பனை செய்யும் செயன்முறையை மேற்கொண்ட பின்னர் சுரங்கத்தை மூடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இரத்தினம் சொத்தாக அந்த பெறுமதியை சொத்துக்கள் பட்டியலிற்கு உட்படுத்து வதற்காக இரத்தின இருப்பு கட்டுப்பாட்டு பிரிவிற்கு அனுப்பியுள்ளதுடன், தற்போது அந்த செயன்முறை செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | இரத்தினக்கற்கல் விற்பனை செய்து சுரங்கங்களை மூடும் நடவடிக்கையை தாமதமின்றி நிறைவு செய்ய வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்தினால் பயிர்செய்கையை ஆரம்பித்து செயற்படுத்தி இருந்ததுடன் அந்த பயிர் செய்கையால் எந்தவித வருமானமும் ஈட்டியிருக்காததுடன் | இக் காலத்தில் நாட்டில் நிலவிய சீரற்ற நிலைமை காரணமாக ஊழியர்களிற்கு சம்பளம் செலுத்தி கொங்கிரீட் தளத்தில் நிறுத்தி | முறையான அங்கீகாரத்துடன் ஆக்கபூர்வமாக செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த |

| | | |
|---|---|---|
| அதன் செலவு ரூபா 3.32 மில்லினானது. மேலும் இந்த பயிர் செய்கையை மேற்கொண்டு செல்லும் போது தேவையான விதைகள், பசளை அல்லது ஏனைய அது தொடர்பான எந்தவித செலவுகளும் மேற்குறித்த கிரயத்திற்கு உட்பட்டிருக்காததுடன், ஊழியர் சம்பளம் மற்றும் மேலதிக நேரம் முக்கியமாக உட்பட்டிருந்தன. | வைத்துக் கொள்ள நேரிட்டது. அதனால் அவர்களை ஆக்கபூர்வ பணிக்காய ஈடுபடுத்தும் நோக்கில் தவிசாளரின் அறிவுரை பிரகாரம் பயிர்செய்கை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. உரிய காலத்தில் மழை கிடைக்காததால் பயிர்செய்கை தோல்வியடைந்துள்ளது. | செயற்பட வேண்டியதுடன் அதற்கு இணங்காத உத்தியோகத்தர்களி ற்கு எதிராக தாபன விதிக்கோவையின் II ஆம் பிரிவின் XLVIII அத்தியாயத்தின் 29 பந்திக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை தெரிவு செய்து முதலிட வேண்டும். |

## 3.2 இனங்கண்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிர்மாணப் பிரிவில் சுமார் ஆறு செயற்திட்டங்கள் செயற்படும் நிலையில் காணப்படுவதுடன் மூன்று செயற்திட்டங்களின் வேலைகள் கைவிடப்பட்டுள்ளதுடன் நான்கு செயற்திட்டங்களின் வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆகவே தற்போது செயற்படும் செயற்திட்டங்கள் (ongoing) 2 இல் ரூபா 14.38 ஆன நட்டம் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் வேலை நிறுத்தப்பட்ட (Suspended) 5 செயற்திட்டங்களின் மற்றும் வேலை கைவிடப்பட்ட (Terminated) 3 செயற்திட்டங்களில் முறையே ரூபா 40.63 மில்லியன் மற்றும் ரூபா 165 மில்லியனாக நட்டம் அறிக்கையிடப்பட்டு இருந்தன. மேலதிதகமாக 2024 ஆண்டிற்காக கிராமிய பாலம் நிர்மாண பிரிவினால் 12 செயற்திட்டங்களிற்கு உரியதாக ரூபா 81 மில்லியனான நட்டமும் அறிக்கையிடப்பட்டு இருந்தன. | 2023 ஆண்டில் நிதிஏற்பாடு இல்லாது அனேகமான செயற்திட்டங்கள் இடை நடுவே நின்றுள்ளன. 2024 ஆண்டளவில் அவற்றில் அநேகமானவை இரு தரப்பு இணக்கப்பாட்டுடன் (Mutual terminated) உடன்படிக்கை இரத்துச் செய்து வேலைத் தளங்களை அகற்றி செலவினை குறைத்துக் கொள்ளள நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறே எஞ்சிய இடைநிறுத்தய செயற்திட்டங்களிலும் செல செவினை குறைத்துக் கொள்ள நடவடிக்கை இடப்பட்டுள்ளது. | 2018 இன் 19 இலக்க கணக்காய்வு சட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்படும் தொகுதி மீளாய்வின் போது நிர்மாண செயற்திட்டங்கள் தொடர்பாக தேவையான தொகுதி கட்டுப்பாடொன்றை தயாரித்து செயற்படுத்த வேண்டியதுடன் உரிய காலத்திற்கு மற்றும் நட்டத்தை குறைத்துக் கொள்ள பொருத்தமான செயற்முறைகளை நடைமுறைப்படுத் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1958 இன் 15 இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 திகதி வரை கூட்டுத்தாபனத்தினால் செலுத்தாத ஊழியர் சேமலாப நிதியத்தின் மீது ரூபா 49.59 மில்லியன மிகை அறவீடாக செலுத்தப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனம் தற்போது அனைத்து கொடுப்பனவுகளையும் செலுத்தியுள்ளது. | காலரீதியாக நியதிச்சட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்வதனூடாக மிகை அளவீடு செலுத்துவதனை உடனடியாக தடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2024 திசெம்பர் 31 திகதி 51 செயற்திட்டங்களிற்கு உரியதாக தாமத இழப்பீடாக ரூபா 264.26 மில்லியன் குறைக்கப்பட்டு இருந்த போதும் அவற்றில் ரூபா 176.35 மில்லியன் 5 ஆண்டிற்கு அதக காலமாக அறவிடப்பட்டு இருக்கவில்லை. 02 ஆண்டு முதல் 05 ஆண்டு வரை அறவிடப்படாத தாமத இழப்பீடு மீதி ரூபா 38.75 மில்லியனானது. | தேவையற்ற கால தாமதம் காரணமாக கால நீடிப்பு அங்கீகரிக்கப்படாத காரணத்தால் அந்த தாமத இழப்பீடு மீதிகள் பெறவேண்டிய தொகையாக கருதப்படவில்லை. | எதிர்காலத்தில் செயற்திட்டங்களை உடன்படிக்கை காலத்தினுள் நிறைவு செய்வதனூடாக இழப்பீடு செலுத்துவதனை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 செயற்பாட்டு வினைதிறமையின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிவில், இயந்திரவியல் மற்றும் மின்சார ரீதியான பொறியியல் மற்றும் ஏனைய பொறியியல் ரீதியான செயற்திட்டங்களை திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் கட்டுமான நடவடிக்கைகள் ஆகிய கூட்டுத்தாபனத்தின் இலக்கு மயப்பட்ட நோக்கத்தை அடைந்து கொள்ளவதற்காக நிர்மாணம், கொங்கிரீட் உருப்படிகளை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை மற்றும் மோடார் வாகன மின்னியல் தொகுதி மற்றும் சேவை வழங்கல் ஆகிய மூன்று பிரிவுகளினூடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனம் ரூபா் 1,205.7 மில்லியன் செயற்பாட்டு நட்டத்தை அடைந்திருந்ததுடன் மொத்த இலாப விகிதம் 127 சதவீத மறை பெறுமானத்தை அறிக்கையிட்டு இருந்தது. நிர்மாணப் பிரிவ மற்றும் கொங்கிரீட் உருப்படி உற்பத்தி மற்றும் விற்பளை பிரிவின் மூலம் கிடைத்த ரூபா 452.71 மில்லியன் மற்றும் ரூபா 84.07 மில்லியன் | 2023 ஆண்டில் நிதிஏற்பாடு இல்லாது அனேகமான செயற்திட்டங்கள் இடைநடுவே நின்றன. 2024 ஆண்டளவில் அவற்றில் அநேகமானவை இரு தரப்பு இணக்கப்பாட்டுடன் (Mutual terminated) உடன்படிக்கை இரத்துச் செய்து வேலைத் தளங்களை அகற்றி செலவினை குறைத்துக் கொள்ளள நடவடிக்கை எடுக்கப்பட்டது. | தேவையற்ற தாமதம் மற்றும் செலவினை தவிர்த்து செயற்திட்ட உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மொத்த நட்டங்கள் கூட்டுத்தாபனத்தின் மொத்த நட்டத்திற்கு முக்கியமான காரணமாக இருந்தது. | | |
| (ஆ) | வருடாந்த நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் இருப்பு மீதியின் பெறுமதி ரூபா 513.37 மில்லியனானதுடன் இருப்பு தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை சரியாக குறித்துக் கொள்ள இயலுமானவாறு இன்வென்றி மொடியுலொன்றை கணக்கீட்டு முறைமையினுள் செயற்படாத காரணத்தால் முழுமையான இருப்பு அறிக்கை ஒன்றை மற்றும் இருப்பு வயது பகுப்பாய்வு அறிக்கையொன்றை கணக்கீட்டு முறைமையினூடாக பெற்றுக் கொள்ள இயலாதிருந்தது. அதனால் நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ள இருப்பு பெறுமதியின் சரியான தன்மை முழுமைத் தன்மை கணக்காய்வின் போது உறுதி செய்து கொள்ள முடியாதிருந்தது. | கனணி மயப்படுத்தப்பட்ட இனவென்றி மொடியுல் ஒன்று கூட்டுத்தாபனத்திடம் இல்லாத போதும் கையால் தயாரிக்கப்பட்ட விரிவான இருப்பு அறிக்கை கூட்டுத்தாபனத்திடம் இருப்பதுடன், முழுமையான இருப்பு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. எமது முடிவின் பிரகாரம் அறிக்கை, இருப்பு பெறுமதியான ரூபா 513.37 மில்லியனின் சரியான தன்மை மற்றும் முழுமை தன்மை உறுதிப்படுத்தல் ஒன்று வழங்கப்படும். | இருப்பு பெறுவனவு மற்றும் விநியோகத்தைசரியாக குறிக்கவும் இருப்பு வயது பகுப்பாய்வு அறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்ள இயலுமானவாற கனணி முறைமையொன்றை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் 12 செயற்திட்டங்களிற்குரிய கூட்டுத் தொகை 0.65 மில்லியனான சிறு செலவு முறபண செலவு மீதியொன்று காணப்பட்டது. | தீர்க்கப்படாத சிறு செலவு முற்பணங்களை தீர்க்க ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அனைத்து தீர்க்கப்படாத சிறு செலவு முற்பணங்களை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்ட முடிவில் அனைத்து தீர்க்கப்படாத சிறு செலவு முற்பணங்களையும் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனம் சந்தை ஒப்பீட்டு விலையின் கீழ் ரத்மலான தளத்திற்கு 25 டொன் தூக்கக்கூடிய பாரந்தூக்கிளை (Crane) வாடகைக்கு பெற்றுக் கொள்ள 2023 சனவரி 03 திகதி 11 நிறுவனங்களிலிருந்து வினைமணு கோரியிருந்தது. விலைமணு கோரும் குறைந்தபட்ச காலஎல்லை 07 நாட்கள் ஆன போதும் 02 நாட்கள் மாத்திரம் வழங்கியிருந்ததால் 03 விலைமணுக்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | அதன் தேவைப்பாட்டின் மீது 02 நாட்களில் விலைமணு கோரப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையிற்கு இணங்க போதியளவான போட்டி ஏற்படுமாறு நடவக்கை எடுக்க உரிய கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.11.1 பிரிவின் பிரகாரம் ஏதேனும் விலைமனு பதிப்பீட்டு நிறைவின் பின்னர் பெறுகைகள் வழிகாட்டியில் குறிப்பிட்டுள்ள படிவத்தின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விலை மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை தயாரித்து, அனைத்து உறுதிப்பாட்டு ஆவணங்களுடனம் அந்த அறிக்கையை பெறுகைகள் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் அவ்வாறு தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்ற இல்லாது நாவள தளத்திற்கு 25 டொன் துர்க்க முடியுமான பாரம் தூக்கியொன்றை (Crane) வாடகைக்கு பெற்றுக் கொள்ள பிரமிட் வில்மா நிறுவனத்திற்கு ரூபா 3.06 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இந்த குறைகளை தவிர்த்து பெறுகைகள் கைநூலில் குறிப்பிடப்பட்டவாறு பெறுகைகள் நடவடிக்கையை உரியவாறு மேற்கொள்ள நடவடிகை எடுக்க வேண்டும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையிற்கு இணங்க செயற்பட உரிய கவனம் செலுத்த வேண்டியதுடன் அதற்கு இணங்க செயற்படாத உத்தியோகத்தரிற்கு எதிராக தாபன விதிக் கோவையின் II பிரிவின் XLVIII இன் 29 பந்தி பிரகாரம் செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் வேலைத் தளங்களில் காணப்படும் வாடிக்கையாளர் பில்லிடப்படாத இருப்பின் (Material at Site) பெறுமதி ரூபா 90.69 ஆனதுடன் வேலை இடைநிறுத்தம் மற்றும் கைவிடப்பட்ட செயற்திட்டங்களிற்குரிய ரூபா 7.30 மில்லின் மற்றும் நிறைவு செய்யப்பட்ட (Completed) செயற்திட்டங்களிற்குரிய ரூபா 0.55 மில்லியன் இருப்பு மீதியும் தீர்க்கப்படாது காணப்பட்டன. | பில்லிடப்படாத இருப்பு காரணமாக Material at Site இற்காக வாடிக்கையாளர் மற்றும் எமது நிறுவனத்திற்கு பணம் வழங்கப்பட்டுள்ளது. அத தொகை விசேடமாக கைவிடப்பட்ட வேலை அல்லது நிறைவு செய்த செயற்பாடுகளிற்காக வாடிக்கையாளரின் இறுதி பட்டியலிலிருந்து கழிக்கப்படும். அவ்வாறு கழித்த பின்னர் தேவையான குறிப்பு சீராக்கத்தை கணக்குகளில் மேற்கொள்ளப்படும். | வேலைத் தளங்களில் காணப்படும் வாடிக்கையாளரிற்கு பில்லிடப்படாத இருப்புக்களை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2006 சனவரி 25 திகதிய இலக்கம் 08 கொண்ட பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 5.4.4 (iii) பிரிவின் பிரகாரம் ஒப்பந்ததாரர் ஒருவரிற்கு கொடுப்பனவு செய்யும் போது கொடுப்பனவுகளின் 90 சதவீதம் நிறைவடைய முன்னர் வேைல ஆரம்ப முற்பணத்தை முழுமையாக அறவிட வேண்டிய போதும் | வேலை நிறைவு செய்த செயற்திட்டங்களிற்கு உரிய முற்பண மீதிகள் தீர்க்கப்படாது காணப்படுவது, இன்னும் இறுதிப் பட்டியல் வழங்கப்படாமையாகும். இறுதிப் பட்டியல் வழங்கப்பட்ட பின்னர் தேவையான சீராக்கம் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையிற்கு இணங்க செயற்பட உரிய கவனம் செலுத்த வேண்டியதுடன் அதற்கு இணங்க செயற்படாத |

| | | | |
|---|---|---|---|
| | முழுமையாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 20 செயற்திட்டங்களிற்குரியதாக ரூபா 20.62 மில்லியன் முறபணமும் 90-100 சதவீதத்திற்கு இடையே வேலைகள் நிறைவு செய்த 3 செயற்திட்டங்கள் இற்குரிய ரூபா 23.57 மில்லியனும் இதுவரை அறவிட்டிருக்கவில்லை. | மேற்கொண்டு அனைத்து கணக்குகளையும் நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தியோகத்தரிற்கு எதிராக தாபன விதிக் கோவையின் II பிரிவின் XLVIII இன் 29 பந்தி பிரகாரம் செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |

**3.6 வாகனத் தொகுதி முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமுர்த்தி அபிவருத்தி திணைக்களத்திடம் மற்றும் டெவ்கோ சோவா நிறுவனத்திடம் இருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்துள்ள 05 மோட்டார் வண்டிகள் 2025 ஆகஸ்ட் வரை கூட்டுத்தபானத்திற்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன் கூட்டுத்தானத்தால் நீண்ட காலமாக பயன்படுத்தும் பெறுமதி ரூபா 69.64 மில்லினான 8 காணிகளையும் கூட்டுத்தாபனத்திற்கு சுவீகரிக்க அல்லது நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ள இதுவரை இயலாதிருந்தது. | இந்த காணிகளை கூட்டுத்தாபனத்திற்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்படுத்தும் சொத்துக்களின் உரிமையை சுவீகரிக்க அல்லது குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 18 திகதிய மற்றும் இலக்கம் 05/2024 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களிலும் பொருளாதார ரீதியாக ஆக்கபூர்வமற்ற அல்லது பயன்பாட்டிற்கு தேவையற்ற வாகனங்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் கூட்டுத்தாபன ஓட்ட செயற்பாட்டுகளிற்கு பயன்படுத்தாத வாகனங்களை அதன் பிரகாரம் பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக காணப்படும் வாகனங்களை கூட்டுத்தாபன கடமைகளிற்கு பயன்படுத்துவதால் 2024 திசெம்பர் 18 திகதிய மற்றும் இலக்கம் 05/2024 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் பராதீன செயன்முறைக்கு கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வாகனங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பயன்படுத்தாத பொருளாதார ரீதியாக தேவையற்ற வாகனங்களை பராதீனம் செய்ய தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்னுடும். |

**4. கணக்களிபொறுப்பு மற்றும் நல்லாளுகை**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 கொண்ட அரசிற்கு சொந்தமான | 2024 திசெம்பர் 31 திகதி சுய இழப்பீடு முறையின் கீழ் அதிக எண்ணிக்கையான ஊழியர்கள் ஓய்வு பெற்றதால் | பொது முயற்சிகள் சுற்றறிக்கை அறிவுரைக்கு இணங்க உரிய திகதிக்கு |

| | | |
|---|---|---|
| வியாபாரங்களிற்கான செயற்பாட்டு கைநூலின் 6.6 பந்தி பிரகாரம் மீளாய்வாண்டிற்காக வருடாந்த நிதிக்கூற்றுக்களை 117 நாட்கள் காலதாமதத்துடன் 2025 ஜுன் 25 திகதி கணக்காய்வாளர் நாயத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நாளாந்த கடமையை போன்றே இறுதிக் கணக்கு தயாரிப்பதும் கடினமாகவுள்ளது. | கணக்காய்வாளர் நாயகத்திற்கு கணக்குகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.2 வருடாந்த அறிக்கை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 2021/01 கொண்ட அரசிற்கு சொந்தமான வியாபாரங்களிற்கான செயற்பாட்டு கைநூலின் - 6.6 பந்தி பிரகாரம் 2022 மற்றும் 2023 ஆண்டிற்காக கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கை 2025 ஒக்டோபர் மாதம் வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2022 ஆண்டறிக்கை பல தடவைகள் திருத்தத்திற்கு உள்ளான காரணத்தால் தாமதமானது. எனினும் 2025 செப்டம்பர் 12 திகதி பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காக அமைச்சு அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. 2023 அறிக்கையையும் மிகவும் விரைவில் பாராளுமன்றத்தில் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பொது முயற்சிகள் சுற்றறிக்கை அறிவுரைக்கு இணங்க வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |